**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02 - 2019**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030- எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்பொதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது (I) கொழும்பு நகரத்தின் தென்பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு, (II) கொழும்பு நகரத்தின் மேற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைபபு, (III) மஹரகம பகுதியில் இருக்கின்ற பொறியியலாளர் அலுவலகத்தின் மேல் இரண்டு மாடிகளை நிர்மாணித்தல், (IV) பாமண்கடையில் அப்பகுதியில் பொறியியலாளர் அலுவலகத்தை நிர்மாணித்தல், (V) மத்திய பயிற்சி நிலையத்தை புதுப்பித்தல், (VI) எலிய கவுஸ் நீர்த் தேக்க வளவில் உத்தேசிக்கப்பட்ட இறைக்கும் இல்லங்களிற்கான சிவில் வேலைகள், (VII) எலிய கவுஸ் நீர்த் தேக்க வளவில் உத்தேசிக்கப்பட்ட இறைக்கும் இல்லங்களிற்கான எந்திரவியல் மற்றும் மின்சார வேலைகள், (VIII) கொழும்பு நகரத்திற்கான ஆலோசனை மற்றும் பங்குபற்றல் நடவடிக்கைகளுடன் சமூகங்களின் இயலளவை கட்டியொழுப்புதல் போன்ற பெயர் கொண்ட 08 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தில் 59.3 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தில் 15.3 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி நிதியத்தாலும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொர் 30 மில்லியன் அல்லது 25.4 சதவீதத்தை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்த அதேநேரம் கொழும்பு மாநகர சபை மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளை கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 ஒக்தோபர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்துவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை.

பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையில் காட்டப்பட்ட நேரடிக் கொடுப்பனவு மற்றும் மீளளிப்பு மீதிகளிற்கும் இடையில் ரூபா 6.44 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 6.44 | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கைதவிர்ப்புகள் அதிகரித்துக் கூறல் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் (814 அறிக்கை) செயற்திட்டத்தின் நேரடிக் கொடுப்பனவுகள் நாளது வரையாக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதியில் விசேடமாக அறிக்கையை நாளது வரையாக்குகையில் கவனத்திற் கொள்ளகூடிய கால இடைவெளி உள்ளன. இந்த ஆண்டில் 814 அறிக்கை 2020 பெப்ரவரி மாத இறுதியிலேயே பார்ப்பதற்கு கிடைக்கக்கூடியதாக இருந்தது. இதனால் செயற்திட்டமானது நிதிக்கூற்றுக்களை இறுதியாக்குவதற்கு அத்தகைய காலம் வரை காத்திருக்க முடியவில்லை. ஆண்டு இறுதியில் டொலர் கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டு இறுதி திகதியிலுள்ள பரிமாற்ற வீதங்களின் அடிப்படையில் நாளது வரையாக்கப்பட்டிருந்தன. வீத முரண் காணமாக குறைவு அல்லது மேலதிக சீராக்கல்கள் 814 அறிக்கையில் குறிப்பிடப்பட்ட உள்ளபடியான தொகையை கருத்திற்கொண்டு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தன. இங்கு குறிப்பிடப்பட்ட | கடன் பதியப்படுகின்ற முகாமைத்துவ முறைமை (டிஆர்எம்எஸ்) அறிக்கையுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கணக்காய்வாளர்கள் இனங்கண்ட வித்தியாசங்கள் அதன் காரணமானதாக உள்ளது. செயற்திட்டமானது ஈஆர்டி வழங்குகின்ற 814 அறிக்கையையோ அல்லது அத்தகைய சீராக்கல்களை தவிர்க்க முடியாதுள்ளது. | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 வரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் கொழும்பு மாநகர சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சிதிட்டம்- செய்திட்டம் 02 இன் கடன் பெறுகைகளிலிருந்து ரூபா 376.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.31 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது அமுலாக்கல் முகவர்களிற்கு இடையில் பிரிக்கப்பட்டு மீளாய்வு காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், கடன் பெறுகைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 376.74 | கடன் பெறுகைகள், வட்டி மற்றும் கடப்பட்டுக் கட்டணங்கள் குறைத்துக் கூறல் | செயற்திட்டமானது மெலதிக பொது முகாமையாளரின் (நிதி) அறிவுறுத்தல்களின் பிரகாரம் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஏற்கனவே (வரைவு கணக்காய்வு அறிக்கைக்கான பதிலுடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது) எவ்வாறாயினும், வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் குறிப்பு இல 17 இன் கீழ் நிதிக் கூற்றுக்களின் கணக்குகளிற்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உரிய கிரயம் அதன்படி பிரிக்கப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் பொது ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 30.26 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் ரூபா 23.92 மில்லியன் | 54.18 | நடைபெறும் வெலைகள் குறைத்துக் கூறல் | இந்த தொகைகள் ஒப்பந்தகாரருக்கு ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டிய பட்டியல்களிற்கான கணக்கீட்டுடன் தொடர்புபட்டது. கணக்காய்வாளருடைய சிபார்சுகளின் அடிப்படையில், நாங்கள் ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டிய தொகைகள் எதிர்காலத்தில் கணக்கீடு | குறைபாடுகளை திருத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையான பிடிகாசு என்பன நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், செயற்திட்டத்தின் நடைபெறும் வெலைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | | செய்யும் போது தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் பிடிகாசு என்பன இனங்காணப்படும். | |
| (ஈ) | பிராந்திய ஆதார நிலையங்களிற்கு மாற்றப்பட்ட ரூபா 4.52 மில்லியன் பெறுமதியான இருபது கணனிகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக் கணக்குகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைபெறும் வெலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 4.52 | நடைபெறும் வெலைகள் அதிகரித்துக் காட்டப்படுவதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டது. | குறித்த பிராந்திய ஆதார நிலையங்கள் இந்த விடயங்களை மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. செயற்திட்டமானது இந்த பெறுமதிகளை நடைபெறும் வெலைகளின் கீழ் காட்டியிருந்தது. செயற்திட்டமானது 2020 இல் மூலமனமாக்கலை பூர்த்தியாக்குவதற்கு உரிய பிராந்திய ஆதார நிலையங்களுடன் ஒண்றிணைந்து செயற்படுகின்றது. | மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

---

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

---

| விடய இல. | நடவடிக்கைகள் | அலகு | எதிர்பார்க் கப்பட்ட இலக்கு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட் ட இலக்கு | விளைவு | முகாமைத்துவத்தின கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தின் தெற்கு பிரந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு | | | | செயற்திட்ட காலப் பகுதியானது குறைவான | அறிக்கையில் குறிப்பிட்டவாறு, 2019 திசெம்பர் 31 வரை அடையப்பட்ட | நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க |
| | - குழாய்கள் குழாயிடல் | மீற்றர் | 212,758 | 80,198 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வீட்டு உரிமை | 33,337 | 7,200 | செயலாற்றல் காரணமாக 2019 யூன் 30 முதல் 2022 ஒக்தோபர் 15 வரை நீடிக்கப் பட்டிருந்தது. | முன்னேற்றம் பட்டியலிடப்பட்ட குறித்த காலப்பகுதியில் செயற்திட்டத்தை பூர்த்தியாக்கவதற்கு போதாதிருந்தது. இதற்கு, ஈஸ்டர் தாக்குதலின் போதான வரையறைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பன மேற் குறிப்பிட்ட மட்டத்திற்கு முன்னேற்றத்தை தடுத்திருந்தது. 2020 ஆம் ஆண்டிலிருந்து முன்னேற்றங்களை அதிகரிக்கும் செயற்பாட்டில் உள்ள போதிலும் வேலைகள் கோவிட்-19 தொற்று நோயால் திரும்பவும் தடைபட்டிருந்தது. எனவே, திருப்திகரமான மட்டத்திற்கு பௌதீக முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு சகல தாமதங்களையும் கருத்திற் கொண்டு திருத்தப்பட்ட நிகழ்ச்சிதிட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், சிறந்த மனிதவள ஆற்றல் மற்றும் இயந்திரங்களுடன் மனித சக்தியின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றன. அதற்கு மேலும், | வெண்டியதுடன் செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களான உரிய அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| - இணைப்பு மாற்றங்கள் | எண் | 23 | - | | | |
| - மாவட்ட மீற்றரிடல் பகுதி முன்னேற்றம் | சதவீதம் | 78 | 42 | | | |
| - ஒட்டுமொத்த ஒப்பந்த முன்னேற்றம் | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செயற்திட்டத்தை வெற்றிகரமாக செய்வதற்கு உற்பத்தியாற்றல் மற்றும் மனிதவள ஆற்றல் என்பவற்றினை அதிகரிப்பதற்கு பயிற்சியளித்தல் நிகழ்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. எதிபாராத பௌதீக நிலைகள் காரணமாக முகங்கொடுக்கும் கஸ்ரங்களை கருத்திற்கொண்டு இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்ட காலப்பகுதி நிடிக்கும் சாத்தியம் உள்ளது. | |
| (ஆ) | கொழும்பு நகரத்தின் மேற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமைப் புனரமைப்பு | | | | குறைவான செயலாற்றல் காரணமாக செயற்திட்ட காலப்பகுதி 2019 யூன் 30 இலிருந்து 2022 ஒக்தோபர் 15 வரை நீடிக்கப் பட்டிருந்தது | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் ஒப்பிடப்படும் போது முன்னேற்றத்தில் தாமதம் காரணமாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நீடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. வளங்களை அதிகரித்து முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கும் ஆரம்ப ஒப்பந்த காலப் பகுதியின் பிரகாரம், செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு அவசியமான | நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வெண்டியதுடன் செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களான உரிய அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன நெருக்கமாக |
| | - குழாய்கள் குழாயிடல் | மீற்றர் | 106,467 | 67,364 | | | |
| | - மின்மாற்றி இணைப்புகள் | வீட்டு உரிமை | 9,593 | 4,652 | | | |
| | - டிம்ஏ முன்னேற்றம் | எண்ணி | 18 | 01 | | | |
| | - ஒட்டுமொத்த ஒப்பந்த முன்னேற்றம் | சதவீதம | 85 | 48 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கண்காணிக்க வேண்டும். |
| (இ) | பாமண்கடை அப்பகுதி பொறியியலாளர் அலுவலக கட்டிடத்தின் நிர்மாணம் | நிர்மாணத்திற்கான காணி கிடைக்காமையால் நிர்மாண வேலைகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நொக்கங்கள் செயற்திட்ட காலப் பகுதிக்குள் அடைய முடியாதிருக்கும் | ஆரம்ப கட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது கொழும்பு தெற்கின் அப்பகுதி பொறியியலாளர் அலுவலக (பாமண்கடை) நிர்மாணத்திற்காக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு நாவல, நாரஹென்பிட்டிய வீதியில் 40 பெர்ச் காணித் துண்டை குத்தகைக்கு விடுவதற்கு உடன்பட்டிருந்தது. பின்னர், கொழும்பு மாநகர சபை அதன் புவியியல் அமைவிட பொருத்தமின்மை காரணமாக கழிவகற்றல் இறைக்கும் இல்லங்களை நிர்மாணிப்பதற்காக அதே காணிகை கோரியிருந்தது. பொருளாதார முகாமைத்துவ குழு (ஓசீஈஎம்) உத்தியோக பூர்வ குழு கூட்டத்தில் கடுமையான விவாதத்தின் பின்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பு மாநகர சபைக்கு சொல்லப்பட்ட காணித் துண்டை ஒதுக்குவதற்கு | மேலும் தாமதப் படுத்தாமல் காணியை பெறுவதற்கும் வேலைகளை தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தீர்மானித்த அதேநெரம் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்காக மாற்று வழியாக (கிரிமண்டல மாவத்தையில் மில்கொ வளவினை) அதே பகுதியில் சமமான பரப்பளவுள்ள காணித் துண்டை ஒழுங்கு செய்தது.

தற்பொது, நகர அபிவிருத்தி அதிகாரசபை

திம்பிரிக்கஸ்சிய மாவட்ட செயலகததிற்கு ஆவணச் செயற்பாட்டு

நடைமுறைகளை

மேற்கொள்வதற்கு

அதிகாரத்தை

ஒப்படைத்திருந்தது.

அதன்படி, அளவீட்டுத் திணைக்களம்

சொல்லப்பட்ட காணியினை 2020 ஆகஸ்ட் மாதத்தின் 2 ஆவது வாரத்தில் அளவீட்டினை

மேற்கொள்வதற்கு

பட்டியலிட்டது.

மேற்குறிப்பிட்ட மெதுவான செயற்பாடுகளால்

பாமண்கடையில் அப்பகுதி பொறியியலாளர்

அலுவலகத்தின்

வடிவமைப்பு / நிர்மான வேலைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொடங்குவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | |
| (ஈ) | உத்தேசிக்கப்படட பயிற்சி நிலையம், விடுதி கட்டிடம் மற்றும் சிற்றூண்டிச்சாலை நிர்மாணம் | சதவீம் | 90 | 69 | செயற்திட்டத்தின் நொக்கங்கள் செயற்திட்ட காலப் பகுதிக்குள் அடைய முடியாதிருக்கும் | கீழ் குறிப்பட்ட காரணங்களால் செயற்திட்ட காலப்பகுதி நீடிப்பு கோரப்பட்டன.<br>• எதிர்பாராத நிலத்தின் நிலைமை மற்றும் 13 nrs இலிருந்து 17 nrs இற்கு அதிகரிக்கப்பட்ட 900 மிமீ போரட் கொங்றீட் கலவை போன்றன உரிய வடிவமைப்பு மாற்றம்.<br>• ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னர் வெலைத் தளத்திற்கு தொழிலாளரின் குறைவான வருகை வேலையின் முன்னேற்றத்தை வீழ்த்தியது.<br>• பாதகமான காலநிலை காரணமாக நிலத்தின் நிலமை<br>• கொடுப்னவு தாமதம் - உள்நாட்டு கூறு ஆரம்ப முற்றணம் கொடுப்பனவு மற்றும் ஏனையவை - IPC 11 இன் வற் கொடுப்பனவு<br>• கோவிட்- 19 நோய் தொற்றியல் காரணமாக, - செயற்திட்ட வேலைத் | பட்டியலிடப்பட்ட வேலைத் திட்டத்திற்குள் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தளத்திற்கு வரையறுத்த தொழிலாளர் அணியினை ஈடுபடுத்தல். (சுகாதார வழிகாட்டல்)
- M&E பொருட்களின் உற்பத்தியக்கல் தாமதப்படல் (வெளிநாடு)
- M&E பொருட்களின் இறக்குமதியில் இடையூறு.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 106,467 மீற்றர் குழாயிடல் வேலைகளிற்காக 2016 ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்ட கொழும்பு நகரத்தின் மேற்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு மற்றும் 9,593 வீட்டுரிமையாளர்களிற்கான சேவை மாற்றங்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் 18 மாவட்டங்களில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 67,364 மீற்றர் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் 4,652 வீட்டு உரிமையாளர்களிற்கு சேவை மாற்றங்கள் மாற்றப்பட்டிருந்தது. மேலும், ஒரு மாவட்ட மீற்றரிடல் பகுதியின் (டிஎம்ஏ) 1,117 மீற்றர்கள் குழாயிடல் வேலைகள் 2020 | செயற்திட்ட காலப்பகுதி நீடிப்பதற்கான சாத்தியம். | 106,467 மீற்றர் மொத்த குழாய் குழாயிடல் வேலைகள் மற்றும் 18 மாவட்ட மீற்றரிடல் பகுதியில் 9,593 வீட்டுரிமையாளர்களிற்கு சேவை இணைப்பு மாற்றங்கள் வழங்குதல் என்பன பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது என உடன்பட்டுகிறோம்.<br>2019.12.31 வரை மொத்த குழாயிடப்பட்ட நீளம் 67,364 மீ ஆக உள்ளதுடன் 4,652 சேவை இணைப்புகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.<br><br>முன்னேற்றத்தை பட்டியலுடன் ஒப்பிடும் போது சில அளவுகள் குறைவாக உள்ளது. | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வெண்டியதுடன் செயற்திட்ட கண்காணிப்பு குழு மூலம் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

மார்ச் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. கொழும்பு நகரத்தில் நீர்வழங்கல் முறைமையின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் மற்றும் வருமானமற்ற தன்னீர் குறைத்தல் என்பன பிரதான நோக்கங்க்கமாக இருந்தது. எவ்வாறாயினும் 18 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் ஒரு மாவட்ட மீற்றரிடல் பகுதி மாத்திரம் முழுமையாக பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கு ஈடுபட்டிருந்தது.

மெதுவாகவுள்ள குழாயிடலிற்கு எதிர்பாராத நிலத்தின் நிலைகள், பாதகமான காலநிலை, உரிய அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறுவதில் குழப்பங்கள் என்பவற்றிற்கு நாங்கள் முகம் கொடுத்தல் பிரதான குறைபாடாக இருந்தது. மேலும், ஈஸ்டர் தாக்குதல் காரணமாக 2019 இல் விதிக்கப்பட்ட பொலீஸ் ஊரங்கு நிர்மாண வேலைகளையும் பாதகமாக பாதித்திருந்தது.

2020 மார்ச் 31 வரையும் ஒரு டிஎம்ஏ இன் 1,117 மீ குழாயிடல் வேலைகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை. 2020 யூலை 14 இல் டிஎம்ஏ 22 இன் பகுதிக்காக கொழும்பு மாநகர சபை வடிகாலமைப்பு சுத்திகரிப்பு பெறப்பட்டதுடன் தற்போது கொழும்பு மாநகர அகழ்தலுக்கான அனுமதி வேண்டப்பட்டது. ஒருதடவை அனுமதி பெறுதலை குழாய் குழாயிடல் வேலைகள் தொடங்கப்பட வேண்டியிருந்தது.

18 டிஎம்ஏ இல் ஒரு டிஎம்ஏ முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டது என நாங்கள் உடன்பட்டோம். எவ்வாறாயினும், பல டிஎன்ஏ களில் நாங்கள் புதிய குழாய்கள் குழாயிடப்பட்டிருந்ததுடன் வழிகள் தொடங்கப்பட்டது. மேலும், பகுதியளவில் தொடங்குதல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதுடன் மிகுதி வேலைகள் முன்னேற்றத்தில்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உள்ளது. ஆகவே, பல ஏனைய எளம்ஏ கள் செயற்திட்ட பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கு தற்போது பங்களிப்பு செய்கின்றன. | |
| (ஆ) | கொழும்பு நகரத்தின் தெற்கு பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழ் குழாயிடல் வேலைகளில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 212,758 மீற்றர்கள் இலக்கு மற்றும் 2021 யூன் அளவில் 33,337 சேவை மாற்றங்கள் என்பன இலக்கினை விட பின்தங்கி இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் 23 மாவட்ட மீற்றரிடல் பகுதியில் 7,200 வீட்டுரிமையாளர்களிற்கு 80,198 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், 06 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில் 48,026 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வெலைகள் 2019 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலப்பகுதி நீடிப்பதற்கான சாத்தியம். | பூர்த்தியாக்கப்பட்ட சேவை இணைப்புகளின் எண்ணிக்கை பூர்த்தியாக்கல் இலக்கினை அடைதல் திருப்தியற்றிருந்தது. ஆகவே, 2020 இல் கோவிட்- 19 காரணமாக எதிர்பாராத இடைவெளியின் பின்னர் தொழஜலாளர் திறன் மற்றும் இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் வீட்டு இணைப்பு வேலைகளை தொடங்குவதற்கு முதலில் முன்னுரிமை வழங்கப்பட்டது. மேலும் புதிய டிஎம்ஏ இல் குழாய் குழாயிடல் அண்மையில் தொடங்கப்பட்டதுடன் குழாய்கள் குழாயிடலின் முன்னேற்றம் சிறிந்த ஒருங்கிணைப்பு, தேவையான மனிதசக்தி மற்றும் இயந்திரங்கள் என்பவற்றுடன்அதிகரிக்கப்படுகின்றன. முன்னேற்றம் அதிகரிக்கப்பட்ட போதிலும் செயற்திட்ட காலப்பகுதி நீடிப்பு செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு உதவியாக இருக்கும் அதேநேரம் வேலைகளின் தரம் அதிகரிக்கப்படுகின்றன. வளங்களை தரமுயர்த்துவதற்கு தலைவரால் ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வெண்டியதுடன் செயற்திட்ட கண்காணிப்பு குழு (பிஎம்யூ) மூலம் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ரூபா 54.26 மில்லியன் கிரத்திலும் 2019 நவம்பர் 11 இல் பூர்த்தியாக்க்கபட வேண்டுமென பட்டியலிடப்பட்டும் 2018 நவம்பர் 12 இல் புவியியல் தகவல் முறைமை மென்பொருள் வழங்கி பொருத்துதல் மற்றும் இணையதள பிரயோக அவிபிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் ஒப்பந்தம் பூர்த்தியாக்கப் பட்டிருக்காததுடன் செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதி தரவு மாதிரி தயார்த்தல், இணையதள பிரயோகம், நுழைவு வசதி, பிரதான சேவையுடன் வேலைக்கு பயிற்சியளித்தல், ஒண்றிணைந்த அழைப்பு நிலையம், பிராந்திய ஆதார சேவை நியைங்களுடன் இணைவதற்கு போதிய பிரதான இடங்கள் கிடைக்காமை போன்றவற்றால் 2020 யூலை 31 வரை மூன்று தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. | சரியான ஒப்பந்த பூர்த்தியாக்கலில் தாமதம் | இணையதள ஜீஐஎஸ் முறைமை அபிவிருத்தி செய்யும் அதேவேளை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாமைப்பு சபை ஐரீ திணைக்களம் மூலம் அபிவிருந்த்தி செய்யப்படுகின்ற வலய உத்தியோகத்தர்களுடைய கள வேலை பதிவுடன் செய்யப்பட வேண்டிய பல புலனாய்வுகள் இருந்தன. இந்த கள செவை பிரயோகங்களின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படுகின்ற நிலையில் உள்ளது, புலனாய்வு பகுதிகளும் சமூகமாக செய்யப்பட வேண்டியிருந்தது. சில சமயங்களில், ஜீஐஎஸ் குழு கள சேவை அபிவிருத்திக்கு இன்னமும் காத்திருக்கின்றதுடன் வாடிக்கையாளர் முறைப்பாட்டு முகாமைத்துவம் பூர்த்தியாக்க்பட வேண்டியிருந்தது. ஆகவே, ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் இருக்காத இந்த புதிய தேவைகள் காரணமாக பல நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தது.<br><br>பிராந்திய ஆதார நிலையங்களிடமிருந்து சகல சேகரிக்கப்பட்ட தகவல்களும் 2019 திசெம்பர் இறுதியளவில் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்த குறிப்புரைகளின் பிரகாரம், புதிய தரவு அடிப்படை கட்டமைப்பிற்கு இருக்கின்ற தரவினை மாற்றுவதற்கு | வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாத்திரம் வேண்டப்பட்டிருந்ததுடன் வேலை பூர்த்தியாக்கப்பட்டது. மேலும் கோவிட -19 தொற்று காரணமாக ஏறத்தாழ 60 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது. | |

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டின் பொது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணி சுவீகரிப்பு செய்வதற்காக முற்பணமாக ரூபா 10 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 991,115, ரூபா 178,897 மற்றும் ரூபா 285,000 ஆன முறையே பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியொழுப்புதல் வரி மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் என்பவற்றினைக் கழித்த பின்னர் நான்கு ஆண்டுகள் கடந்த பின்னர் ரூபா 8.54 மில்லியன் தொகை திருப்பப்பட்டிருந்தது. இதன்விளைவால், காணி சுவீகரிப்பிற்காக செலவழித்த ரூபா 1.46 மில்லியன் தொகை சிக்கனமற்ற செலவினமாக கருதப்பட்டது. | செயற்திட்ட நிதிகள் 3 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்ற செலவினமாக இருந்தது. | செயற்திட்டமானது தொகையை தீர்ப்பதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையானது பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியொழுப்புதல் வரி மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் என்பவற்றினைக் கழித்த பின்னர் திருப்பிச் செலுத்தியிருந்தது. | மேற்கொள்ளப்படுகின்ற வேலைகள் முடிவடைந்த பின்னர் தாமதப்படுத்தாமல் முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தேலவலவில், உத்தேசிக்கப்பட்ட பயிற்சி நிலையம், விடுதிக் கட்டிடம் மற்றும் சிற்றூண்டிச்சாலை என்பவற்றின் நிர்மாணத்தின் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் 18 இன் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் ஒப்பந்த நோக்கெல்லைக்கு முரணாக முரண் கட்டளையின் (முரண்-19) கீழ் தலைமை | ஒப்பந்த நோக்கெல்லைக்கு முரணாக தலைமை அலுவலக கட்டிடத்திற்கு செலவினம் ஏற்பட்டதுடன் மேலதிக வேலைகளின் கீழ் அனுமதி பெறுவதற்கு முன்னர் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் கருத்தரங்கு மண்டபத்தின் புதுப்பித்தல் பொது முகாமையாளர் (NWSDB) மற்றும் பயிற்சி நிலைய ஒப்பந்தத்தலிருந்து இனங்காணப்பட்ட சேமிப்புக்களை | செயற்திட்டமானது நோக்கெல்லைக்குள் வேலைகளை நிறைவேற்ற வேண்டியதுடன் மேலதிக வேலைகளிற்கான அனுமதிகள் கொடுப்பனவின் முன்னர் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகத்தின் கருத்தரங்கு கட்டிட புதுப்பித்தலிற்காக ரூபா 11.91 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் ரூபா 10.56 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட முரண் கட்டளை 2020 யூன் 04 இலேயே அனுமதிக்கப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்யப்பட்டது. | பயன்படுத்தி மேலதி பொது முகாமையாளர் (NWSDB-P&P) இடமிருந்தான விசேட வேண்டுகை கடிதம் மூலம் (இணைப்பு II) ஆலோசனை வழங்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 6 இல் (இணைப்பு III) முரண் கட்டளை குழுக் கூட்டம் நடைபெற்றிருந்த போதிலும் முரண் கட்டளை 2020 யூன் 04 இல் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட காசு வெளியேற்றம் மற்றும் தாமதக் கொடுப்பனவுக்கான வட்டி என்பவற்றினை கோருவதை தவிர்ப்பதற்கு திருப்திகரமாக பூர்த்தியாக்கப்பட்டது என ஒப்பந்தகாரர் வேலைகளிற்காக நியாயமாக செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | குறைவான நிதி முகாமைத்துவம் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 112.44 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவு தீர்ப்பனவிலுள்ள தாமதத்தால் மேலதிக நிதிக் கட்டணங்களாக ரூபா 2.12 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது. ஆகவே, அத்தகைய செலவினம் பயனற்ற செலவினமாக கருதப்பட்டிருந்தது. | சிக்கனமற்ற செலவினம் | இலங்கை அரசாங்கத்தின் நிதிகள் கிடைக்கர்மையால் ஒப்பந்தகாரரின் விலைப்பட்டியலின் உள்நாட்டு / அரசாங்க பகுதி தீர்ப்பனவில் பல தாமதங்களை செயற்திட்டம் அனுபவித்திருந்தது. மேலும், சில சந்தர்ப்பங்களில் திறைசேரி போதிய வெளிநாட்டு நிதி ஒதுக்கீடு இன்மையால் ஒப்பந்தகாரருடைய விலைப்பட்டியல் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனவே, தாமதமாக தீர்க்கப்பட்ட விலைப்பட்டியலில் தாமதத்திற்கான வட்டியை ஒப்பந்தகாரருக்கு | உரிய திகதிகளில் விலைப் பட்டியலின் தொகையை தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டமானது எதிர்காலத்திலும் தாமதத்திற்கான வட்டியாக கருத்திற்கொள்ள வேண்டிய தொகை தீர்க்க வேண்டியிருக்கும். | |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 30 ஆம் திகதிய 18 ஆம் இலக்க இடைக்காலக் கொடுப்பனவு சான்றிதழ் வரை தெலவலவில் செயற்திட்ட பயிற்சி நிலையம், விடுதிக் கட்டிடம் மற்றும் சிற்றூண்டிச்சாலை என்பவற்றிற்கான நிர்மாணம் ரூபா 26.61 மில்லியன் பெறுமதியில் மேலதிக வேலைகள் மற்றும் முரண் கட்டளைக்காக செய்யப்பட்ட ரூபா 9.49 மில்லியன் தொகைக்காக 2020 மே 31 வரையும் வேலைகளிற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | குறைவான ஒப்பந்த நிர்வாகம் | 2019 நவம்பர் மாதத்தில் நிலுவையிலிருக்கின்ற முரண் கட்டளை அனுமதியுடன் கொடுப்பனவு செய்யப்பட்டது என நாங்கள் ஏற்றுக்கொண்டோம். எவ்வாறாயினும், செலுத்தப்பட்ட தொகை பீஜயூ மற்றும் ஆலோசனையாளரால் மீளாய்வு செய்யப்பட்டு சான்றுபடுத்தப்பட்டது நிலுவையாக இருக்கின்ற முரண் கட்டளை அனுமதி ஊடாக செலுத்தப்பட்ட தொகை ஒப்பந்தகாரரால் கோரப்பட்ட உள்ளபடியான தொகையைவிட குறைவாக உள்ளது. மேற்குறிப்பிட்ட முரண் கட்டளைகள் 2019 நவம்பரின் பின்னர் நடைபெற்ற முரண் கட்டளைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இது குழு சில உறுப்பினர்களின் வீதங்களில் குழப்பங்கள் காரணமாக அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும், தற்போது வீதங்கள் உடன்பாடு காணப்பட்டதுடன் குறித்த முரண் கட்டளைகள் சமர்ப்பித்து | கொடுப்பனவு செய்ய முன்னர் முரண் கட்டளைகளிற்காக முறையான அனுமதி பெறுவதற்குரிய நடைமுறையை பின்பற்ற வெண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடுத்த உடனடி முரண் கட்டளை குழுவால் அனுமதிக்கப்படும். அத்துடன் அத்தகைய நிலுவையாகவிருக்கின்ற முரண் கட்டளை கொடுப்பனவு எதிர் காலத்தில் முன்னனுமதியுடன் மாத்திரம் செய்யப்படும் என செயற்திட்டமும் உறுதிப்படுத்தும். | |
| (ஆ) | 06 ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 58.69 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியொழுப்புதல் வரி என்பன 2019 திசெம்பர் 31 வரையும் 292 முதல் 441 நாட்கள் வரையான காலப்பகுதியில் நிலுவையாக இருந்தன. | நலிவான நிதி முகாமைத்துவம் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒப்பந்தகாரர்களின் நிலுவையாக இருக்கின்ற வற்றிற்காக வாக்குப்பேரேட்டு அடிப்படை அனுமதி பெறுவதை தொடர்ச்சியாக செய்கின்றதுடன் நிலுவையாக இருக்கின்ற என்பீரி தொகையை தீர்ப்பதற்கு நிதிபொறிமுறையொன்று கண்டறிய முயல்கின்றனர். | உரிய திகதிகளில் விலைப் பட்டியல் கொடுப்பனவுகளை செய்வதற்கு முறையான நிதி முகாமைத்துவ பொறிமுறையை ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட அலுவலகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2018 யூன் 10 ஆம் திகதிய 02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நலிவான நிதி முகாமைத்துவம் மற்றும் சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்காமை | இந்த விடயம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் தெளிவுபடுத்தப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |